OS No.54/ 2015

Dated : 26.07.2022

Time: 1.00 p.m. To 1.10 p.m.

P.W. - 1 சாட்சி சத்தியபிராமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

<u>பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1. மேற்படி என் உடன்பிறந்தவர்களுக்கு என்ன தேதியில் சீர்வரிசை கொடுத்தேன் என குறிபிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும் எந்த தேதியில் அவர்கள் அவர்களடைய பாக உரிமையை விட்டுகொடுத்தார்கள் என குறிப்பிட்டு வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்து குறித்து பாதி அளவில் இரண்டாம் பிரதிவாதி பெயரில் உயில் இருப்பதை தெரிந்துகொண்டுதான் நான் பிரச்சனை செய்கிறேன் என்றால் அது தவறு.
2. மேற்படி இரண்டாம் பிரதிவாதி பெயரில் உள்ள உயில் பற்றி 2014 ம் ஆண்டு அறிவிப்பிலேயே எனக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், எனவே 4 வருடம் கழித்து மேற்படி உயில் செல்லாது என காலதாமதமாக கேட்டுள்ள பரிகாரம் செல்லது என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் கண்டுள்ள சொத்து எனக்கோ, 1 ம் பிரதிவாதிக்கோ யாதொரு உரிமை இல்லை என்றும், அது இரண்டாம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் அது தவறு. மேற்படி துரைசாமி இறந்தபிறகு இருதிசடங்கை செய்தது, 1,2 பிரதிவாதிகளின் மகன்தான் மொட்டை அடித்து கொள்ளிவைத்தார்கள் என்றால் அது தவறு.
3. மேற்படி துரைசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து இரண்டாம் பிரதிவாதிக்கு சென்றுவிட்டதால் அதில் நான் பாகம் கோரமுடியாது என்றால் அது தவறு. மேலும் அந்த உயில் உண்மையானது, அதன் பெயரில் வருவாய் ஆவணம் மாற்றப்பட்டது என்றும், எனவே அந்த உயில் என்னை கட்டுபடுத்தும் என்றால் அது தவறு.

மறுவிசாரணை- இல்லை.

" என்னால்/ என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**